## தேசிய வடிவமைப்பு நிலையம் - 2017

---

தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் மன்ற இணைந்த அதிகாரச்சட்டத்தின் 84(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிலையத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை நிலையத்தின் தலைவருக்கு 2018 யூலை 09 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிலையத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிலையத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவம் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் எழும் தாக்கங்களைத் தவிர, தேசிய வடிவமைப்பு நிலையத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாபூர்வமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 06

மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த ரூபா 5,387,674 கிரயமுடைய தலைமை அலுவலக வளாகத்தில் உள்ள பழைய நிர்வாகக் கட்டிடத்தின் அரைப்பங்கு 2018 பெப்ரவரி 23 ஆந் திகதி தகர்க்கப்பட்டு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும், இது தொடர்பாக நியமத்தின் 29(உ) பந்தியின் பிரகாரம் தேவையான வெளிப்படுத்தல் நிதிசார் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 132 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க மானியத்தைக் கணக்கிலிடுவது மற்றும் பணிக் கொடைக்கான நிதியேற்பாடு என்பன தொடர்பாக நிலையம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் குறிப்பின் கீழ் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் 03 ஊழியர்களது சேவைக் காலம் குறைவாகக் கணிப்பிடப்பட்டு பணிக்கொடை கணிப்பிடப்பட்டமையால் மீளாய்வாண்டினது பணிக்கொடைத் தொகையும் பணிக்கொடைக்கான நிதியேற்பாடும் ரூபா 59,652 குறைவாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) வரிசை அமைச்சிற்குரிய அபிவிருத்தி வேலையை அமுலாக்குவதற்காக மீளாய்வாண்டின்போது நிலையம் பெற வேண்டிய ரூபா 262,260 கணக்கிலிடப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது நிலையத்திற்கான புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான மதியுரைச் சேவை மற்றும் விலை மதிப்பு அறிக்கையைப் பெறுதல் என்பவற்றிற்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 969,260 ஆரம்ப செலவினத்தை நடைபெறும் வேலையாகக் கணிப்பிடாது கட்டிடக் கணக்கில் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2018 ஆம் ஆண்டின் கொடுப்பனவு செய்யப்பட்ட தீர்வை வரியாகிய ரூபா 80,000 மீளாய்வாண்டின் செலவினமாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிலையத்தினது நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 07 நிலையான சொத்துக்களது கூட்டுத் தொகை ரூபா 70,963,010 ஆகியபோதும், பொருட் கணிப்புச் சபையினது அறிக்கையின் பிரகாரம் அச்சொத்துக்களது மொத்தப் பெறுமதி ரூபா 56,526,211 ஆகியமையால் ரூபா 14,436,799 விளக்கமளிக்கப்படாத வேறுபாடாகக் காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றின்மை

மீளாய்வாண்டின்போது 13 நாட்குறிப்புகளைப் பயன்படுத்தி ரூபா 29,480,402 கூட்டுத் தொகை கணக்கிலிடப்பட்டிருந்தபோதும், நாட்குறிப்புகளுக்கான உறுதிச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 7,996,367 கூட்டுத் தொகையுடைய வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளுள் 1 முதல் 3 ஆண்டுகள் வரையிலான கடன் மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 1,054,140 ஆகும். 3 ஆண்டுகளும் அதற்கு மேற்பட்டதுமான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 744,806 ஆகும். இக்கடன் மீதிகளை அறவிடுவதில் போதிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினது இறுதித் தினத்தில் உள்ளவாறான ரூபா 968,664 கூட்டுத் தொகையுடைய வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளுள் 1 முதல் 3 ஆண்டுகள் வரையிலான மீதிகளது கூட்டுத் தொகை ரூபா 408,657 ஆகும். 3 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதிகள் ரூபா 310,007 ஆகும். இக்கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப்பிரமாணம் 138(6) | கொடுப்பனவிற்குரிய இன்வொய்சு மற்றும் போதுமானளவு ஆவணச் சான்றுகளது மூலப் பிரதிகள் உறுதிச் சான்றுகளுடன் சமர்ப்பிக்கப்படாது 03 உறுதிச் சான்றுகளின் மூலம் ரூபா 121,723 கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 3/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | ஒரு சர்ந்தப்பத்தில் வழங்கப்படக் கூடிய அதிகூடிய முற்பணம் ரூபா 100,000 ஆகும். அவ்வரம்பை மீறுவதற்குத் தேவையான சந்தர்ப்பம் ஏற்படும் போது திறைசேரியிடமருந்து ஏற்கனவே அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். எனினும், அவ்வாறு முன் கூட்டிய அங்கீகாரமின்றி 05 சந்தர்ப்பங்களில் ரூபா 3,362,045 கூட்டுத் தொகை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |

## 2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2000 சனவரி 11 ஆந் திகதிய பீஈ/பீஈ/5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் படிகள், ஊக்குவிப்பு படிகள், ஏனைய நிதிசார நலன்களை வழங்குவதற்கு முன்னர் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமாயினும், அவ்வாறாக அங்கீகாரம் பெறப்படாது மீளாய்வாண்டின்போது 78 ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு படியாக ரூபா 1,170,000 கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. முறையான மதிப்பாய்வு முறைகளைக் கடைப்பிடிக்காது இவ்வூக்குவிப்புப் படி வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்கென அருங்கலைகளில் ஈடுபட்டுள்ளோரின் அபிவிருத்திப் பணிக்கென அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிலையத்தினது மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 7,671,395 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 5,208,630 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப்பெறுபேற்றில் ரூபா 2,462,765 அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது திறைசேரியிலிருந்து பெறப்பட்ட ரூபா 3,270,032 மீண்டுவரும் மானியத்தில் ரூபா 7,994,423 அதிகரிப்புடன் ஏனைய செலவினத்தில் ரூபா 3,352,769 குறைவும் ஏற்பட்டமையுமே மேற்படி நிதிப் பெறுபேற்றின் மேற்படி அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளதும் நிதிப் பெறுபேறுகளை பகுப்பாய்வு செய்கையில், 2014 ஆம் ஆண்டில் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருந்ததுடன் ஏனைய ஆண்டுகளில் நிதிப் பெறுபேற்றில் மிகை ஏற்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரசாங்க வரி மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றை மீண்டும் சீராக்கல் செய்கையில் 2013 ஆம் ஆண்டில் நிலையத்தின் பங்களிப்பு ரூபா 40,772,386 ஆகியதுடன், அது படிப்படியாக அதிகரித்து மீளாய்வாண்டின்போது ரூபா 66,784,173 ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடும் மீளாய்வும்

1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் மன்றம் மற்றும் அவற்றுடன் இணைந்த நிறுவன அதிகாரச் சட்டத்தின் கீழ் தேசிய வடிவமைப்பு நிலையம் தாபிக்கப்பட்டிருந்ததுடன், அதிகாரச் சட்டத்தின் 82 ஆம் பிரிவின் பிரகாரம் சுட்டிக் காட்டப்பட்டிருந்த அதிகாரங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையத்தின் பிரதான பணியாகிய வடிவமைப்பை உருவாக்குதல் 2013 முதல் 2016 வரை படிப்படியாக அதிகரித்திருந்ததுடன், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது வடிவமைப்பு உருவாகும் எண்ணிக்கை34 சதவீதம், அதாவது, 317 குறைவடைந்திருந்தது. அதி கூடிய உருவமைப்பை மாத்திரம் அருங்கலைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு அறிமுகஞ் செய்து செயல் முன்னேற்றத்தில் அதனை உட்புகுத்தியமையும் 2 உருவமைப்பாளர்களது சேவையை மீளாய்வாண்டின்போது பெற முடியாது போனமையும் இக்குறைவுக்கான காரணமாகும்.

(ஆ) 2013, 2014 ஆம் ஆண்டுகளில் நிலையம் மேற்கொண்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களது எண்ணிக்கை அதிகரித்திருந்தபோதும், 2015 முதல் மீளாய்வாண்டு வரை அது தொடர்ந்து குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களது எண்ணிக்கை 19.3 சதவீதம் அதாவது 12 குறைவாகவிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது ரூபா 1,500,000 செலவில் 82 பதவியணியினரது அறிவு, திறமை, எண்ணம் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், ரூபா 900,000 மாத்திரமே செலவிடப்பட்டு 50 ஊழியர்களை மாத்திரமே பயிற்றுவித்ததால் உருப்படியான செயலாற்றல் 61 சதவீதமாக மாத்திரமே இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின்போது அருங்கலைகளில் ஈடுபட்டிருப்போருக்கு தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவதற்கென ரூபா 13,250,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பணிக்கென உள்ளவாறு செலவிடப்பட்ட தொகை ரூபா 3,003,000 ஆகும். அதற்கமைய, இப்பணியை நிறைவேற்றுவதிலான செயல் முன்னேற்றம் 22.6 சதவீதமாகியதுடன், இந்நோக்கத்தை நிறைவேற்றுவதிலான உருப்படி இலக்கைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்காமையால் உருப்படிச் செயலாற்றலைப் பரிசீலிக்க முடியாது போனது.

(உ) நிலையத்தை ஸ்தாபிப்பதற்கான அதிகாரச் சட்டத்தின் பிரகாரம், நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளுள், நிலையத்தின் தகவல்களை உள்ளடக்கிய வெப் தளம் ஒன்றை உருவாக்குவதற்கென மீளாய்வாண்டின் போது ரூபா 50,000 நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், அப்பணி நிறைவேறவில்லை.

(ஊ) மீளாய்வாண்டின்போது குறைவாக உள்ள மூலப் பொருட்களுக்கான பிரதியீடு மற்றும் வினைத்திறன் உற்பத்திச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு ரூபா 500,000 கூட்டுத் தொகையையுடைய நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின்போது ரூபா 39,000 செலவில் ஆய்வுப் பணிகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் இந்த இலக்கை அடைய முடியவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிராமிய முயற்சிகளது அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மற்றும் அருங்கலைகளில் ஈடுபடுவோரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் அருங்கலைகளில் ஈடுபட்டிருப்போருக்கு வழங்குவதற்காக 2017 ஒக்டோபர் முதல் டிசெம்பர் வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,728,925 கூட்டுத் தொகையையுடைய உபகரணங்களும் சிறு கருவிகளும் இவ்வறிக்கைத் தினம் வரை அத்துறையில் ஈடுபட்டுள்ளோருக்கிடையே விநியோகிக்கப்படாதிருந்தது.

(ஆ) அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் நிலையத்தின் தலைமை அலுவலகத்திற்கென பழைய அலுவலகக் கட்டிடத்தைத் தகர்த்து, புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கு மீளாய்வாண்டின்போது ரூபா 80,000,000 செலவு செய்வதெனத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், திட்டத்தை அங்கீகரித்தல் மற்றும் மதியுரைச் சேவைகள் என்பவற்றிற்கு மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 969,260 கூட்டுத் தொகை பொறியியல் பணிகளுக்கான மத்திய மதியுரைப் பணியகத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டமை மாத்திரமே நடைபெற்றிருந்ததுடன், கட்டிடத்தை அமைக்க எண்ணிய காணியின் சட்டபூர்வ உரித்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நெடுங்காலமாக இருந்து வரும் வடிவமைப்பு மதியுரைக் கணக்கின் கீழ் முற்பணமாகக் கணக்கிலிடப்பட்டிருந்த ரூபா 335,666 கூட்டுத் தொகையுடைய தீர்த்து வைக்கப்படாத முற்பணத்தை இனங்கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 4.3 குறைவான நிதியப் பயன்பாடு

முன் கூட்டியே திட்டமிடப்படாததால் மீளாய்வாண்டின்போது 02 வெளிநாட்டுச் செயற்திட்டங்களான Oxfam மற்றும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்திட்டம் (UNDP) என்பவற்றிற்குப் பெறப்பட்ட நிதியத்தில் ரூபா 4,661,732 முதல் ரூபா 16,263,617 வரையிலான தொகை ஆண்டு முழுவதும் வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டவாறிருந்தது.

### 4.4 பதவியணி நிர்வாகம்

நிலையத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 109 ஆகும். உள்ளவாறான பதவியணி 87 ஆகும். பதவியணியில் ஒட்டுமொத்தமாக 22 பேர்கள் குறைவாக இருந்தனர். இப்பதவியணி குறைவு காரணமாக உள்ளகக் கட்டுப்பாடு, வேலைப் பகிரந்தளிப்பு, உள்ளகச் செவ்வை, உள்ளகக் கணக்காய்வு எனும் பணிகள் வினைத்திறனுடன் நடைபெறுவதில் தாமதம் நிலவியது.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்திக்கான நோக்கத்தை அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்ஜீ/எஸ்டீபீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ‘‘2030 நிகழ்ச்சி நிரலின்’’ பிரகாரம் அரச நிறுவனம் ஒன்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, மீளாய்வாண்டின்போது நிலையம் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்கு என்பவற்றை அடைவதற்காக ‘‘வறுமை ஒழிப்பு’’ நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சுட்டிக் காட்டிகளை உருவாக்கியிருந்ததுடன், ஆரம்பத் திட்டங்களைத் தயாரித்தவாறு அருங்கலைகளில் ஈடுபட்டுள்ளோரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நடவடிக்கைகளில் ஈடுபட்டவாறிருந்தது.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கையும் நிதிக்கூற்றுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், நிலையத்தின் 2017 ஆம் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 03 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 6.2 உள்ளக்க கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் 2017 நவம்பரில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தார். போதியளவு பதவியணியினர் அப்பிரிவில் இல்லாததால் மீளாய்வாண்டின்போது திட்டமிட்டவாறு உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் உள்ளகக் கணக்காய்வு பணிகளை மேற்கொள்ள முடியாது போனது.

### 6.3 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வரிசை அமைச்சின் மூலம் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூபா 7,976,511 நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தபோதும், அந்நிதி ஏற்பாட்டிற்கு அதிகமாக ரூபா 4,707,602 செலவிடப்பட்டிருந்ததுடன், இயந்திரங்கள், உபகரணங்கள் என்பவற்றிற்கு ஆண்டின்போது ரூபா 10,000 மூலதன நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்தபோதும், அந்நிதியேற்பாட்டிலும் கூடுதலாக ரூபா 486,850 செலவிடப்பட்டிருந்தது.

### 6.4 ஆண்டறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் முன் வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வு அறிக்கை 3 மொழிகளிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், 2014 முதல் 2016 வரைக்குமான ஆண்டறிக்கைகள் 2018 யூன் மாதமளவிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது நிலையத்தின் தலைவரது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை** | **அவதானிப்புகள்** |
| --- | --- |
| (அ) நிதிக் கட்டுப்பாடு | பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளைத் தீர்த்து வைக்காமை, வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படும் நெடுங்கால மீதிகளை இனங்கண்டு அவற்றைத் தீர்த்து வைக்காமை. |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | சொத்துப் பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை, பொருட் கணிப்புச் சபைகளை அமைக்காமை, பொருட் கணிப்பில் தாமதம் நிலவியமை. |

| | | |
|---|---|---|
| (இ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கட்டுப்பாட்டு விதிமுறைகளை அறிமுகஞ் செய்யாமை, உள்ளகக் கணக்காய்வு வினைத்திறனுடன் செயற்படாமை. |
| (ஈ) | பதவியணி முகாமைத்துவம் | நிரந்தரப் பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை நெடுங்காலமாக ஈடுபடுத்துதல், நிரந்தர பதவியில் உள்ள வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை தாமதப்படுத்துதல். |
| (உ) | களஞ்சியக் கட்டுப்பாடு | களஞ்சியப் பொருட்கள் மற்றும் கொள்வனவு செய்யப்படும் பொருட்கள் என்பன முறைப்படி கையிருப்புப் பதிவேடுகளில் பதிவு செய்யப்படாமையும் கையிருப்புப் பதிவேட்டை முறைப்படி நாளதுவரையாக்காமையும். |